# தமிழர் மரபியல் நடுவம்
# யாப்பு ஆவணம்

பொருளடக்கம்


| | |
|---|---|
| **1**.பெயர் | 2 |
| **2**.முத்திரை | 2 |
| 2.2 அமுலாக்கலும் ஆவணங்களும்: | 2 |
| 2.3 புத்தகங்களும் பதிவுகளும் | 2 |
| 3.நிறுவனத்தின் நோக்கங்களும் குறிக்கோள்களும் | 2 |
| 4. அங்கத்துவம் | |
| 4.1 அங்கத்துவத்திற்கான அடிப்படைத் தகமைகள் | 3 |
| 4.3 அங்கத்துவ உரிமைகள் | 4 |
| 5.சபையின் அதிகாரங்கள் | 5 |
| 6.ஒரு இயக்குனராவதற்கான தகுதி | 7 |
| 7.ஒரு இயக்குனரை தெரிவு செய்தல் | 7 |
| 8.இயக்குனர்களின் எதிர்பார்ப்புகள் | 8 |
| 9.இயக்குனர்களை நீக்குதல் | 8 |
| 10.இயக்குனர்களை நியமித்தல் | 8 |
| 11.பதவிக்காலம் | 9 |
| 12. அங்கத்துவ நீக்கம் | 9 |
| 13.வருடாந்த மற்றும் சிறப்பு பொதுக்கூட்டங்கள் | 9 |
| 14.இணைச் சட்டங்களின் திருத்தம் | 9 |

# தமிழர் மரபியல் நடுவம்

1. பெயர்

- **தமிழர் மரபியல் நடுவம்** என்னும் இவ்வமைப்பு இதிலிருந்து அமைப்பு என்று அழைக்கப்படும்.

2. **தலைமை அலுவலகம்**

இந்த அமைப்பின் தலைமை அலுவலகம் ஆனது சட்டத்திற்கேற்ப மாற்றம் செய்யப்படும்வரை ஒன்ராறியோ மாகாணத்தில் உள்ள ரொறன்ரோ நகரத்தில் அறை இலக்கம் 310-5200 Finch Avenue East, Toronto, M1S 4Z4. இல் இயங்கும்.

3. **முத்திரை, ஆவணங்கள், பதிவுகள்**

- **முத்திரை மற்றும் ஆவணப் பதிவுகளின் பாதுகாவலர்**

இந்த அமைப்பின் ஒரு உறுப்பினரை அமைப்பின் முத்திரை, அதன் சொத்துக்கள், மற்றும் அனைத்து ஆவணங்கள், கணக்கியல் பத்திரங்கள், பதிவுகள், கடிதப் போக்குவரத்துக்கள், ஒப்பந்தங்கள் மற்றும் நிறுவனத்திற்கு சொந்தமான ஏனைய ஆவணங்கள் போன்றவற்றிற்குப் பாதுகாவலராக நிர்வாகசபை நியமிக்கும். மேற் குறிப்பிடப்பட்ட அமைப்புக்கு சொந்தமான சகல ஆவணங்களையும் நிர்வாக சபையானது கோரிக்கையின் பெயரில் அணுக முடியும்.

- **அமுலாக்கலும் ஆவணங்களும்**

உறுதிகள், பரிமாற்றங்கள், அனுமதிப்பத்திரங்கள், ஒப்பந்தங்கள் மற்றும் செயற்பாடுகள் நிர்வாகசபையின் அனுமதியுடன் அல்லது அனுமதியின் பேரில் அமைப்பின் தலைவர், செயலாளர் அல்லது பொருளாளர் ஆகிய மூவரில் ஏதாவது இருவரால் கையொப்பமிடப்படும், அத்துடன் தேவை ஏற்படின் நிறுவனத்தின் முத்திரை பொறிக்கப்படும்.

- **ஆவணங்களும் பதிவுகளும்**

கனடா நாட்டுச் சட்டத்தின்படி, அல்லது இந்த யாப்பும் அதன் இணைச்சட்டங்களும் கோருவதன்படி, எல்லா ஆவணங்களும் மற்றும் பதிவுகள் ஒழுங்காகவும் சரியாகவும் பேணப்படுவதை உறுதிப்படுத்துவதற்கு நிர்வாகசபை பொறுப்பாக இருக்கும்.

3. **நிறுவனத்தின் நோக்கங்களும் குறிக்கோள்களும்.**

கனடாவிலும் மற்றும் உலகெங்கிலும் உள்ள தமிழர்களின் அடையாளம், பாரம்பரியம் மற்றும் வரலாற்றைப் பாதுகாத்தல், பேணுதல், வளர்த்தல் மற்றும் முன்நோக்கி நகர்த்தல்.

4. **அங்கத்துவம்**

- **அங்கத்துவத்திற்கான அடிப்படைத் தகைமைகள்**
  ஒவ்வொரு அங்கத்தவரும் 18 வயது அல்லது அதற்கு மேற்பட்ட வயதுடையவராகவும் கனடாவில் வசிப்பவராகவும், எந்த ஒரு அமைப்பிலும் இயக்குனராகவோ, அல்லது தொண்டு நிறுவனங்களின் பதிவு (பாதுகாப்பு தகவல்) சட்டத்தின் (கனடா) கீழ் சான்றிதழுக்குட்பட்டதாக இருந்துவரும் பதிவு செய்யப்பட்ட தொண்டு நிறுவனங்களிலோ அதைவிட அத்தகைய பதவியை வகிப்பதற்கு சட்டத்தின் கீழ் தகைமையுடையவராவும் இருக்க வேண்டும்.
- ஒவ்வொரு அங்கத்தவரும் தமிழ் இனத்தவராக இருக்க வேண்டும்.
  ஒவ்வொரு அங்கத்தவரும் ஈழத்தமிழரைத் தனித்துவமான கலாச்சாரம், சமூக-பொருளாதார வாழ்க்கை முறை, மொழி, பாரம்பரியம் கொண்ட தற்போதைய இலங்கைத் தீவின் வடக்கு கிழக்கில் அவர்களின் தாயகத்தை உள்ளடக்கிய தனித்துவமான புவியியல் பிரதேசத்தில் பாரம்பரியமாக வாழ்ந்து வரும் தனித்துவமான தேசமாக அங்கீகரிக்க வேண்டும்.
- மே 14, 1976 அன்று ஏகமனதாக நிறைவேற்றப்பட்டு, ஈழத்தமிழர் தேசத்தால் பெருமளவில் அங்கீகரிக்கப்பட்ட "வட்டுக்கோட்டைத் தீர்மானம்" என்ற தீர்மானத்தின் அடிப்படையில் ஈழத் தமிழர்களின் அரசியல் அபிலாசைகளை ஒவ்வொரு உறுப்பினரும் அங்கீகரிக்க வேண்டும். ஒவ்வொரு தேசத்துக்கும் உள்ளடங்கிய சுயநிர்ணய உரிமையின் அடிப்படையிலான, சுதந்திரமான மதச்சார்பற்ற தமிழீழ அரசுக்கான தீர்மானம், இலங்கைத்தீவின் தமிழினத்தின் இருப்பைப் பாதுகாப்பதற்கானது.
- ஈழத்தமிழர்கள் இலங்கை அரசால் தொடர்ந்து நடத்தப்பட்டு வரும் ஒரு நீண்டகால திட்டமிட்ட இனப்படுகொலைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர் என்பதை ஒவ்வொரு உறுப்பினரும் அங்கீகரிக்க வேண்டும்.
- ஈழத்தமிழர்களின் விடுதலைப் போராளிகள், மற்றும் மாவீரர்களால் தமிழீழத்திற்காக ஆற்றிய பங்களிப்புக்களையும், தியாகங்களையும் ஒவ்வொரு உறுப்பினரும் அங்கீகரிக்க வேண்டும்.
- தமிழ்த்தேசியம், ஈழத்தமிழரின் அரசியல் அபிலாஷைகள், மற்றும் தமிழ் இனப்படுகொலையை மறுத்த, மாவீரரின் பங்களிப்பை அங்கீகரிக்காத எந்த ஒரு தனிமனிதர்களுடனும், அமைப்புகளுடனும், வெளிநாட்டு அரசாங்கங்களுடனும் உறுப்பினர் பணியாற்றியிருக்கக் கூடாது.

- **அங்கத்துவத்திற்கான உரிமை**
  - அங்கத்தவர் சந்தாத் தொகை, மதிப்பீடு அங்கத்தவர்களின் வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் சிறப்புத்தீர்மானம் மூலம் தீர்மானிக்கப்படும். அங்கத்தவர்களுக்கு எந்த நேரத்திலும் அவர்கள் செலுத்த வேண்டிய சந்தா நிலுவை குறித்து எழுத்துமூலமாக அறிவிக்கப்படும். மேலும் அத்தகைய அறிவிப்பு கிடைத்த ஒரு (1) நாட்காட்டி மாதத்திற்குள் செலுத்தத் தவறும் உறுப்பினர்கள் தாமாக அமைப்பின் அங்கத்தவர் என்ற நிலையில் இருந்து நீங்குவார்கள்.

  - அமைப்பின் குறிக்கோள்கள் மற்றும் நோக்கங்களின் முன்னேற்றத்தில் ஆர்வமுள்ள நபர்கள் அமைப்பின் அங்கத்தவராகத் தகுதி பெறலாம். அனைத்து விண்ணப்பதாரிகளும் அமைப்பினால் பரிந்துரைக்கப்பட்ட அங்கத்தவர் படிவத்தை பூர்த்தி செய்து அத்துடன் விண்ணப்பக் கட்டணத்தையும் செலுத்த வேண்டும். அங்கத்தவர் தகுதியை மறுபரிசீலனை செய்ய இயக்குனர் சபை அல்லது இயக்குனர் சபையால் நியமிக்கப்பட்ட எந்த ஒரு குழுவும் அங்கத்தவர் விண்ணப்பத்தை ஏற்றுக் கொள்ளும் பட்சத்தில், விண்ணப்பதாரர் நிறுவனத்தின் அங்கத்தவராக ஏற்றுக் கொள்ளப்படுவதுடன், பொருத்தமான அங்கத்துவப் பதிவேட்டில் அங்கத்தவரின் பெயரைச் செயலாளர் பதிவிட வேண்டும்.

  - அமைப்பின் அங்கத்துவத்திற்கான அடிப்படைத் தகைமைகளிற்கேற்ப அளவுகோல்களை அல்லது முன்நிபந்தனைகளை விண்ணப்பதாரி கொண்டிராவிட்டால் அங்கத்துவர்களின் தகுதியுடமையை மீள்பரிசீலனை செய்வதற்காக இயக்குனர் சபையால் நியமிக்கப்பட்ட எந்த ஒரு குழுவினாலோ அல்லது இயக்குனர் சபையாலோ விண்ணப்பம் நிராகரிக்கப்படும். அங்கத்துவ மறுப்பிற்கான காரணங்களை விண்ணப்பதாரருக்கு எழுத்துமூலம் தெரிவிக்க

வேண்டும். விண்ணப்பதாரர் செலுத்தும் கட்டணம் எந்தவித கழிவும் இன்றி திருப்பிக் கொடுக்கப்பட வேண்டும்.

- அமைப்பின் அங்கத்துவம் ஆயுள் அங்கத்துவமாக இருக்க வேண்டும்.

- அங்கத்தவருக்கான அடிப்படைத் தகுதிகள் மற்றும் அவ்வப்போது பரிந்துரைக்கப்படும் இயக்குனர் சபையால் நிர்ணயிக்கப்பட்ட கட்டணத்தை செலுத்தியவர்களே ஆயுட்கால அங்கத்தவர்களின் அளவுகோல்களை பூர்த்தி செய்தவர்கள் ஆவர். ஆயுட்கால அங்கத்தவரின் சிறப்புரிமைகள், இயக்குனர்கள் சபையால் அவர்களின் அங்கத்துவம் ஏற்றுக் கொள்ளப்பட்ட பிறகு வரும் நாட்காட்டி வருடத்தின் முதற் திகதியிலிருந்து ஆரம்பமாகும்.

- ஆயுட்கால அங்கத்துவம் மாற்றத்தக்கது அல்ல.

- நாட்காட்டி வருடத்தின் ஆரம்பத்தில், ஒரு நாட்காட்டி வருடத்திற்கான ஆயுட்கால அங்கத்தவர்களுக்கான புதிய விண்ணப்பங்களுக்கான இயக்குனர் சபையின் ஒப்புதல், அங்கத்தவர் பதிவேட்டில் உள்ள ஆயுள் அங்கத்தவர்களின் எண்ணிக்கையில் ஐந்து சதவீதத்திற்கு (5%) அதிகமாக இருக்கக்கூடாது.

- ஐந்து வருடங்களாகத் தொடர்ந்த வருடாந்த அங்கத்துவத்திற்கு பின்பு தகுதியான அங்கத்தவர்கள், அங்கத்தவர்களிற்கான அடிப்படைத் தகுதிகளைப் பூர்த்தி செய்த பிறகு நியமிக்கப்பட்ட குழுவால் அவர்களின் தகுதி அங்கீகரிக்கப்பட்ட பின்பு ஆயுள் அங்கத்தவர்களாக மாற்றம் பெறலாம். இந்த அங்கத்துவ மாற்றங்கள் ஆயுள் அங்கத்துவத்தின் 5% வருடாந்த அதிகரிப்பு வரம்புகளை வைத்துக் கணக்கிடப்பட மாட்டாது.

- **அங்கத்துவ உரிமைகள்**
    - அமைப்பின் அங்கத்தவர்களுக்கு அனைத்துக் பொது கூட்டங்கள் பற்றிய அறிவிப்பைப் பெறவும், கலந்து கொள்ளவும், வாக்களிக்கவும் உரிமை உண்டு.

    - அமைப்பின் எல்லாப் புத்தகங்களையும், பதிவுகளையும் மட்டுமல்லாது, அமைப்பு ஈடுபடும் எல்லா ஒப்பந்தங்கள் அல்லது உடன்பாடுகள் மற்றும் எல்லா நிதிக்கூற்றுக்களினதும் முழுமையாக அணுகுதலை அங்கத்தவர் கொண்டிருப்பர்.

    - ஏகோபித்த அங்கத்துவர் உடன்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ள வேறு ஏதாவது உரிமைகள் அல்லது நன்மைகள் எல்லா அங்கத்தவர்களுக்கும் உண்டு.

- **அங்கத்துவ நீக்கம்**

- அங்கத்தவர் இறப்பு.

- அங்கத்தவர் எழுத்துமூலமான அங்கத்துவ விலகலை தலைவருக்குக் கையளிப்பதன் மூலம் விலகலாம். இந்த நிலையில் அங்கத்துவ விலகலில் குறிப்பிடப்பட்ட திகதியில் இருந்து அங்கத்துவ விலகல் அமுலுக்கு வரும்.

- சட்டத்தின் கீழ் அமைப்பு கலைக்கப்பட்டது அல்லது கலைந்தது.

- நிர்வாகசபையின் கருத்தின்பிரகாரம், அங்கத்தவரின் செயல்கள் அமைப்பின் நலன்களுக்குக் தீங்கு விளைவிப்பதாக அல்லது ஊறுவிளைவிப்பதாக இருந்தால் அங்கத்துவமானது நிர்வாக சபையால் முற்றுப் பெறச் செய்யப்படலாம்.

- அங்கத்தவருக்கான அடிப்படைத் தகுதிகளுக்கு முரணான செயலில் அங்கத்தவர் ஈடுபடுகிறார் என்பது நிர்வாகசபையின் அபிப்பிராயமாக இருந்தால், அங்கத்துவம் முடிவுக்கு வரும்.

**5. சபையின் அதிகாரங்கள்.**

- அமைப்பின் சொத்து, வணிகம் மற்றும் விவகாரங்கள் நிர்வாக சபையால் நிர்வகிக்கப்படும்.

- தலைவர் அமைப்பின் தலைமை நிர்வாக அதிகாரியாகவும் (CEO), செயலாளர் மற்றும் பொருளாளர் முறையே பதிவுகள் மற்றம் சொத்துக்களின் பாதுகாவலராகவும் இருக்க வேண்டும்.

- நிர்வாக சபையில் 11 இயக்குனர்கள் இருக்க வேண்டும். அவர்களில் 7 பேர் குறைந்தது ஒரு கூட்டத்தை நடத்தத் தேவைப்படுவர்.

- நிர்வாகசபைக்குச் சட்டத்தின்படி உள்ள அதிகாரங்களுக்கு மேலதிகமாக, பின்வரும் அதிகாரங்கள் மற்றும் கடமைகளும் இருக்கும்.

- **பொது நிர்வாகம்**

நிர்வாகசபையானது அனைத்து விடயங்களிலும் அமைப்பின் விவகாரங்களை நிர்வகிப்பதுடன், அதன் பெயரில் அமைப்பு சட்டபூர்வமாக மேற்கொள்ளக்கூடிய ஒப்பந்தம் மற்றும் இனிவரக்கூடிய எந்தவொரு ஒப்பந்தத்தையும் செயற்படுத்தலாம். அத்தகைய எல்லா அதிகாரங்களையும் பயன்படுத்துவதுடன், அதைப் போன்ற ஏனைய செயல்களையும் விடயங்களையும் அமைப்புரீதியாக அதன் சரத்துக்கள் மூலம் அல்லது வேறுவிதமாகச் செயற்படுத்துவதற்கும் அதிகாரம் கொணடுள்ளது.

- **செலவுகள்**
- நிர்வாகசபை சார்பாக செலவினங்களை அங்கீகரிக்கும் அதிகாரம் நிர்வாக சபைக்கு இருக்கும்.

- 100,000 கனடா டொலருக்கு மேலான மூலதனச் செலவுகள் சிறப்புப் பொதுக் கூட்டத்தின் மூலம் நிறுவனத்தின் அங்கத்தவர்களால் அங்கீகரிக்கப்பட வேண்டும்.

- **அதிகார ஒப்படைப்பு**
- நிர்வாக சபையானது ஏற்புடைய முகவர்களை நியமித்து, அது அவசியமாகக் கருதுமிடத்து அமைப்பினல் அத்தகைய ஊழியர்களை ஈடுபடுத்தலாம். அத்துடன் அத்தகைய நியமனத்தின் போது சபையால் பரிந்துரைக்கப்படும் அத்தகைய கடமைகளை நிறைவேற்றவும் அத்தகைய நபர்களுக்கு அதிகாரம் இருக்கும். சட்டத்துக்கு அமைவாக நிர்வாகசபை காணும் எந்த ஒரு செயற்பாட்டையும் அமுல்படுத்துவதற்காகக் குழுக்களையும் உபகுழுக்களையும் அமைப்பதற்கு நிர்வாகசபைக்கு அதிகாரம் உள்ளது.
- **பரிமாற்றங்களும் பரிவர்த்தனைகளும்.**
- அமைப்புக்குச் சொந்தமான உரிமையுள்ள பங்குகள், சரக்குகள், ஆணைப்பத்திரங்கள், தெரிவுகள், மற்றும் ஏனைய பத்திரங்கள், நிலங்கள், கட்டிடங்கள், மற்றும் பிற சொத்துக்களை அசையும் அல்லது அசையா, உண்மையான அல்லது தனிப்பட்டவற்றை உரிமையாக்கியிருக்கும்போது எந்த ஒரு உரிமை அல்லது நலனையும் வாங்க, குத்தகைக்கு அல்லது வேறுவழியில் பெற்றுக் கொள்ள, விற்க, பரிமாற்ற அல்லது வேறுவழியில் அகற்றுவதற்கும், அத்தகைய பரிசீலனைக்காகவும் சபை அறிவுறுத்தத்தக்கதாகக் கருதும் அத்தகைய விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளின் அடிப்படையில் நிர்வாகசபை வெளிப்படையாக அதிகாரம் கொண்டுள்ளது.
- **கடன்பெறுதல்**
- காலத்திற்குக் காலம் நிர்வாகசபையானது:

- அமைப்பினால் அனுமதிக்கப்பட்ட நிதி நிறுவனங்களில் இருந்து கடன் பெறக்கூடிய தொகை வரை பணத்தை கடனாகப் பெற்றுக் கொள்ளலாம்.

- அமைப்பின் கடன் பொறுப்புகளை (பத்திரங்கள், கடன் பத்திரங்கள், கடனீட்டுப் பங்குகள், குறிப்புகள் உட்பட பாதுகாப்பாகவோ அல்லது பாதுகாப்பற்றதாகவோ இருக்கும் பொறுப்புகள் போன்றவை) வழங்கலாம், விற்பனை செய்யலாம் அல்லது உறுதிமொழி வழங்கலாம்.

- அமைப்பின் எந்த ஒரு கடன் கடப்பாடுகளுக்காகவும் அல்லது எந்த பணம் கடன் வாங்கப்பட்டதற்காகவும் அல்லது ஏனைய கடன் அல்லது பொறுப்புகளுக்காகவும், புத்தகக் கடன்கள், உரிமைகள், அதிகாரங்கள், உரிமம் மற்றும் முயற்சிகள் உட்பட, நிறுவனத்திற்கு தற்போது சொந்தமான அல்லது அதன்பின் வாங்கிய உண்மையான அல்லது தனிப்பட்ட,

அசையும் அசையா சொத்துக்கள் அனைத்தையும் வசூலிக்கலாம், ஈடுவைக்கலாம் அல்லது அடமானம் வைக்கலாம்.

- **மேற்பார்வை**
- நிர்வாக சபையானது எந்தவொரு அங்கத்தவர்கள், நன்கொடையாளர்கள், பிற அமைப்புகள் அல்லது நிறுவனங்களிடம் இருந்து வரும் பணப்பரிமாற்றங்கள் மீது பொது மேற்பார்வையை மேற்கொள்வதுடன் அதில் ஒரு பொதுவான அமைப்புக்கு உரித்துடைய நிறுவனங்களின் அல்லது நிதிச் செயற்பாடுகளின் மீதும் மேற்பார்வையையும் கொண்டிருக்கும்.

- **வரவு செலவுத் திட்டம்**
- நடப்பு நிதியாண்டு முடிவதற்கு இரண்டு மாதங்களுக்கு முன்னதாகவே நிறுவனத்திற்கான வருடாந்த செயற்பாட்டு வரவு செலவுத்திட்டத்தைச் சபை பரிசீலித்து அங்கீகரிக்க வேண்டும். சபையால் தீர்மானிக்கப்படாவிட்டால், நிதியாண்டு ஒவ்வொரு வருடமும் டிசம்பர் 31ஆம் திகதியுடன் முடிவடையும்.
- **கணக்காய்வு**
- அமைப்பினால் நிதிக்கையாளுதல் செய்யப்படும் எந்தவொரு செயலையும் கணக்காய்வு செய்வதற்கு நிர்வாக சபைக்கு அதிகாரம் இருக்கும்.
- **கொள்கைகளும் திட்டங்களும்**
- அமைப்பின் செயற்பாடுகள் மற்றும் அதன் குழுக்களின் செயற்பாடுகளை நிர்வகிக்கும் நிதியைக் கோரும் முறை உட்பட எந்தவொரு நிதி வேலைத் திட்டங்கள் மற்றும் நடைமுறைகளை நிர்வாகசபை திட்டம் அமைத்துச் செயல்படுத்தும். அமைப்பின் செயற்பாட்டின் பல்வேறு அம்சங்களையும் எந்த நிர்வாக செயற்பாட்டுக் கொள்கைகளையும் ஆளுகை செய்ய நிர்வாக சபை அவ்வப்போது எந்த கொள்கைகளையும் ஏற்கலாம் அல்லது மாற்றம் செய்யலாம்.

## 6. இயக்குனராவதற்கான தகுதி

- அமைப்பின் இயக்குனருக்கான விண்ணப்பத்தின் தகுதியை இயக்குனர்கள் சபை அல்லது நியமிக்கப்பட்ட அமைப்பு தீர்மானிக்கும்.

- தேர்வுச் செயல்முறையில் இயக்குனர் சபை அல்லது நியமிக்கப்பட்ட அமைப்பு பின்வரும் அளவுகோல்களைப் பயன்படுத்தும்.

- அமைப்பின் நன்னிலை அங்கத்தவர்
- ஒரு அங்கத்தவராக அமைப்பின் நலன்கள், நோக்கம் மற்றும் குறிக்கோள்களை முன்னேற்றுவதில் நிரூபிக்கப்பட்ட செயற்பாட்டுப் பதிவுகள்.

- விடாமுயற்சி, நேர்மை, நல்லெண்ணம் மற்றும் நிறுவனத்தின் நலன்கள் ஆகியவற்றுடன் செயற்பட்டதற்கான நிரூபணமான பதிவு
- தமிழர் சமூக முன்னேற்றத்திற்கான நிரூபிக்கப்பட்ட செயற்பாடுகள்.

## 7. ஒரு இயக்குனரைத் தேர்ந்தெடுத்தல்

- நிர்வாக சபையின் பெரும்பான்மை வாக்குகளால் அல்லது நியமிக்கப்பட்ட அமைப்பால் தங்களின் நியமனம் அங்கீகரிக்கப்பட்டவுடன், வேட்பாளர்கள் வருடாந்தப் பொதுக்கூட்டத்தில் தேர்தலுக்கு விண்ணப்பிக்கலாம்.

## 8. இயக்குனர்களுக்கான எதிர்பார்ப்புகள்

இயக்குனர்களிடமிருந்து பின்வருவன எதிர்பார்க்கப்படுகின்றது:

- அமைப்பில் நற்சான்றுள்ள அங்கத்தவராக இருத்தல் வேண்டும்.
- அமைப்பின் நோக்கம் மற்றும் குறிக்கோள்களை முன்னேற்றுதல்
- அக்கறையுடனும், நேர்மையுடனும், நம்பிக்கையுடனும் அமைப்பின் நலன்களுக்காக செயற்படுதல்
- நிர்வாகசபையின் கூட்டங்களிலும், அவர்களால் நியமிக்கப்பட்டுள்ள எந்த நிர்வாகசபைக் குழுக்களின் கூட்டங்களிலும் தவறாமல் கலந்து கொள்ளுதல்
- அமைப்பின் நோக்கம் மற்றும் குறிக்கோள்களை முன்னேற்றுவதில் கனடாவிலும் உலகெங்கிலும் உள்ள தமிழ் சமூகம் மற்றும் பிற பங்குதாரர்களை ஈடுபடுத்துதல் மற்றும் சேவைகள் நிகழ்வுகளில் பங்கு பெறுதல்.
- அங்கத்துவத்தின் அடிப்படைத் தகுதிகளின் கீழ் காணப்படும் பெறுமானங்கள் மற்றும் அமைப்பின் நோக்கம் மற்றும் குறிக்கோள்களுடன் ஒருமித்துச் செல்லும் பங்குதாரர்களுடனான தொடர்புகளைப் பேணுதல்.

## 9. இயக்குனர்களின் நியமனம்

- இயக்குனர் சபையின் சிறப்புத் தீர்மானத்தின் மூலம் சபையில் உள்ள ஒரு வெற்றிடம் நிரப்பப்படும்.
- ஒவ்வொரு சபை அங்கத்தவரும் நான்கு (4) வருட காலத்திற்கு அல்லது அவருக்கு பின் வருபவர் நியமிக்கப்படும் வரை நியமிக்கப்படுவர். அத்துடன் ஒரு (1) மேலதிகமான நான்கு வருட தொடர்ச்சியான காலத்திற்கு மீண்டும் நியமிக்கப்படலாம்.

**10. பதவிக்காலம்**

- இயக்குனர்கள் 4 வருட காலத்திற்குத் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்

**11. இயக்குனர்களின் நீக்கம்**

- கீழ்வரும் சம்பவங்களில் ஏதேனும் ஒன்று நிகழும்போது ஒரு இயக்குனரின் பதவி தானாகவே நீங்கும்.

சிறப்புத்தீர்மானம் மூலம் இயக்குனரை நீக்க அங்கத்தவர்கள் வாக்களித்தல்.

ஒரு இயக்குனர் இறப்பு அல்லது இயலாமை, உறுப்பினராக இருப்பதற்கான அடிப்படைத் தகுதிகள் மற்றும் இயக்குனர்களின் எதிர்பார்ப்புகளுக்கு ஏற்ப இனி இயக்குனராக பணிபுரிய தகுதியற்றவராகக் கருதப்படுதல்.

அமைப்புக்கு எழுத்து மூலமாக பதவிவிலகல் அறிவித்தலை அனுப்புதல்.

**12. வருடாந்த மற்றும் சிறப்பு பொதுக் கூட்டங்கள்**

- சபையில் நிர்ணயிக்கப்பட்ட ஒரு நாளில், ஒன்ராறியோவில் உள்ள ஒரு இடத்தில் வருடாந்த பொதுக் கூட்டம் நடைபெறும். எந்த ஒரு அங்கத்தவருக்கும் கோரிக்கையின் பேரில், வருடாந்த பொதுக் கூட்டத்திற்கு 7 நாட்களுக்கு முன்பாக வரவு செலவுத் திட்டத்தின் நகல், நிதி நிலை அறிக்கைகள் வழங்கப்பட வேண்டும். ஆண்டுப் பொதுக் கூட்டத்தில் பரிமாறப்படும் விடயங்கள் சட்டத்தின்படி இருக்க வேண்டும்.

- வருடாந்தப் பொதுக்கூட்டத்திற்குப் பொது அறிவிப்பு அல்லது விளம்பரம் தேவையில்லை. ஆனால் அத்தகைய ஒவ்வொரு கூட்டத்தின் நேரம், மற்றும் இடம் பற்றிய அறிவிப்பு ஒவ்வொரு உறுப்பினருக்கும் வழங்கப்படும் அல்லது மின்னியக்க முறையில் அனுப்பப்படும்.

- சிறப்புப் பொதுக்கூட்டங்கள் இயக்குனர் சபையால் எந்த நேரத்திலும் கூட்டப்படலாம், மற்றும் 10% ஆயுள் அங்கத்தவர்களின் எழுத்துமூலமான கோரிக்கையின் பேரிலும் நடத்தப்படலாம்.

- வருடாந்தப் பொது மற்றும் சிறப்பு பொதுக்கூட்டங்களுக்கான ஆகக்குறைந்த அங்கத்தவா் எண்ணிக்கை, வருகை தந்த அங்கத்தினர் ஆயுள் அங்கத்தவரில் மூன்றில் ஒரு பங்காக இருக்க வேண்டும்.

- வருடாந்த பொது அல்லது சிறப்புகப் கூட்டத்தில் ஒரு முக்கிய பிரேரணையைப் பரிசீலிப்பதற்கான அறிவிப்பு கூட்டத்திற்கு குறைந்தது 7 நாட்களுக்கு முன்னதாக செயலாளருக்கு எழுத்து மூலமாகக் கொடுக்கப்பட வேண்டும். கூட்டத்தில் பிரேரணை நிறைவேற்றப்படுவதற்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை உறுப்பினர்களின் ஆதரவு தேவைப்படும்.

**இணைச் சட்டங்களின் திருத்தங்கள்**

- நிர்வாகசபைக் கூட்டத்தில் இயக்குனர்கள் மற்றும் அந்த நோக்கத்திற்காக முறையாக கூட்டப்பட்ட கூட்டத்தில் நேரில் அல்லது பதிலாள் மூலம் கலந்து கொள்ளும் அங்கத்தவர்களில் குறைந்தது மூன்றில் இரண்டு பங்கு (2/3) வாக்கெடுப்பு மூலம் அமைப்பின் நோக்கங்கள் மற்றும் குறிக்கோள்கள், அங்கத்துவமும் அங்கத்துவத்திற்கான அடிப்படைத் தகுதிகளும் மற்றும் **இயக்குனர்களின் எதிர்பார்ப்புகள்** தவிர நிறுவனத்தின் இணைச் சட்டங்களின் மற்ற அனைத்துப் பிரிவுகளும் இயக்குனர் சபையின் பெரும்பான்மையினரால் இயற்றப்பட்ட இணைச் சட்டத்தால் இரத்துச் செய்யப்பட அல்லது திருத்தப்பட அனுமதிக்கப்படுகிறது. மேற்படி கூட்டத்திற்குத் தேவையான ஆகக் குறைந்த எண்ணிக்கை ஐம்பது (50%) உறுப்பினர்களுக்கு குறையாமல் நேரிலோ, அல்லது பதிலாள் மூலமாகவோ இருக்க வேண்டும். அறுபது (60) நாட்களுக்குக் குறையாமல், முன்மொழியப்பட்ட திருத்தம் பற்றி அங்கத்தவர்களுக்கு எழுத்து மூலமாக கொடுக்கப்பட வேண்டும்.

- அமைப்பின் இணைச் சட்டங்களின் திருத்தம் அமைப்பின் அங்கத்தவர்களால் நிறைவேற்றப்பட்ட நேரத்தில் இருந்து அமுலுக்கு வரும். இந்த இணைச் சட்டங்கள் அமைப்பின் தற்போதைய இணைச் சட்டங்களை இரத்துச் செய்து அதற்கு பதிலீடாக அமையும்.

யாப்பு திருத்தங்களுக்கான சபைக்கூட்டத்தில் சபை அங்கத்தவர்களால் அங்கீகரிக்கப்பட்டுப் புதுப்பிக்கப்பட்டது.

தலைவர்:

திகதி: சனவரி 3, 2022

பொருளாளர்:

திகதி: சனவரி 3, 2022